# இன்றைய இறைவார்த்தை

# 27-07-2015

## ஆண்டின் பொதுக்காலம் 17ஆம் வாரம் – திங்கள்
## முதல் ஆண்டு

**முதல் வாசகம்:**

இம்மக்கள் தங்களுக்காகப் பொன்னால் தெய்வங்களை உருவாக்கிப் பெரும் பாவம் செய்து விட்டார்கள்.

**விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம். 32 : 15 – 24, 30 – 34**

அந்நாள்களில், அந்நாள்களில் மோசே திரும்பி மலையிலிருந்து இறங்கி வந்தார். முன், பின் இரு புறமும் எழுதப்பட்ட உடன்படிக்கைப் பலகைகள் இரண்டும் அவர் கையில் இருந்தன. அப்பலகைகள் கடவுளால் செய்யப்பட்டவை. பலகைகள் மேல் பொறிக்கப்பட்டிருந்த எழுத்தும் கடவுள் எழுதியதே. அந்நேரத்தில் மக்கள் எழுப்பிய கூச்சலைக் கேட்ட யோசுவா மோசேயை நோக்கி, “இது பாளையத்திலிருந்து எழும் போர் முழக்கம்” என்றார். அதற்கு மோசே, “இது வெற்றி முழக்கமோ தோல்விக் குரலோ அன்று. களியாட்டம்தான் எனக்குக் கேட்கிறது” என்றார். பாளையத்தை அவர் நெருங்கி வந்தபோது கன்றுக்குட்டியையும் நடனங்களையும் கண்டார். மோசேக்குச் சினம் மூண்டது. அவர் தம் கையிலிருந்து பலகைகளை மலையடிவாரத்தில் வீசியெறிந்து உடைத்துப் போட்டார். அவர்கள் செய்து வைத்திருந்த கன்றுக்குட்டியை எடுத்து நெருப்பில் சுட்டெரித்து மிருதுவான பொடியாகு மட்டும் அதை இடித்துத் தண்ணீரில் தூவி, இஸ்ரயேல் மக்களைக் குடிக்கச் செய்தார்.

பின்னர் மோசே ஆரோனை நோக்கி, “இம்மக்கள் உமக்கு என்ன செய்தார்கள்? இவர்கள் மேல் பெரும் பாவம் வந்துசேரச் செய்துவிட்டீரே!” என்று கேட்டார். அதற்கு ஆரோன், “என் தலைவராகிய நீர் சினம் கொள்ள வேண்டாம். இம்மக்கள் பொல்லாதவர்கள் என்பது உமக்குத் தெரியுமே! அவர்கள் என்னை நோக்கி, “எங்களுக்கு வழிகாட்டும் தெய்வங்களைச் செய்து கொடும். எங்களை எகிப்து நாட்டினின்று நடத்தி வந்த அந்த ஆள் மோசேக்கு என்ன ஆயிற்றோ தெரியவில்லை” என்றனர். நானும் அவர்களிடம் “பொன் அணிந்திருப்பவர்கள் கழற்றித் தாருங்கள்” என்றேன். அவர்களும் என்னிடம் தந்தனர். நான் அதனை நெருப்பில் போட, இந்தக் கன்றுக்குட்டி வெளிப்பட்டது” என்றார்.

மறுநாள் மோசே மக்களை நோக்கி, “நீங்கள் பெரும் பாவம் செய்து விட்டீர்கள். இப்போது நான் மலை மேல் ஏறி ஆண்டவரிடம் செல்லப் போகிறேன். அங்கே ஒருவேளை உங்கள் பாவத்திற்காக நான் கழுவாய் செய்ய இயலும்” என்றார். அவ்வாறே மோசே ஆண்டவரிடம் திரும்பி வந்து, “ஐயோ, இம்மக்கள் தங்களுக்காகப் பொன்னால் தெய்வங்களை உருவாக்கிப் பெரும்பாவம்

செய்துவிட்டார்கள். இப்போதும், நீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளும். இல்லையேல், நீர் எழுதிய உம் நூலிலிருந்து என் பெயரை நீக்கிவிடும்'' என்றார். ஆண்டவரோ மோசேயிடம், ``எவன் எனக்கு எதிராகப் பாவம் செய்தானோ, அவனையே என் நூலிலிருந்து நீக்கி விடுவேன். நீ இப்போதே புறப்பட்டுப் போ. உன்னிடம் நான் கூறியுள்ளபடி மக்களை நடத்திச் செல். இதோ என் தூதர் உன் முன்னே செல்வார். ஆயினும் நான் தண்டனைத் தீர்ப்பு வழங்கும் நாளில் அவர்கள் பாவத்தை அவர்கள் மேலேயே சுமத்துவேன்'' என்றார்.

**ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**
**விடுதலைப் பயணம்: 106 : 19 – 20, 21 – 22, 23 (பல்லவி 1a)**
**பல்லவி: ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் அவர் நல்லவர்!**
**அல்லது: அல்லேலூயா**

1. இஸ்ரயேலர் ஓரேபில் ஒரு கன்றுக்குட்டியைச் செய்து கொண்டனர். வார்ப்புச் சிலையை விழுந்து வணங்கினர். தங்கள் ``மாட்சி''க்குப் பதிலாக, புல் தின்னும் காளையின் உருவத்தைச் செய்து கொண்டனர் பல்லவி

2. தங்களை விடுவித்த இறைவனை மறந்தனர். எகிப்தில் பெரியன புரிந்தவரை மறந்தனர். காம் நாட்டில் அவர் செய்த வியத்தகு செயல்களை மறந்தனர். செங்கடலில் அவர் செய்த அச்சுறுத்தும் செயல்களையும் மறந்தனர். பல்லவி

3. ஆகையால், அவர்களை அவர் அழித்து விடுவதாகக் கூறினார். ஆனால், அவரால் தேர்ந்துகொள்ளப்பட்ட மோசே, அவர்முன் உடைமதில் காவலர்போல் நின்று அவரது கடுஞ்சினம் அவர்களை அழிக்காதவாறு தடுத்தார். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: (யாக்கோபு 1 : 18)**
அல்லேலூயா, அல்லேலூயா!
தம் படைப்புகளுள் நாம் முதற்கனிகள் ஆகும்படி
உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் நம்மை ஈன்றெடுக்க அவர் விரும்பினார்.
அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

கடுகு விதை வளர்ந்து வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து தங்கும் அளவுக்குப் பெரிய மரமாகும்.

✠ **தூய மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 13 : 31 – 35**

அக்காலத்தில் இயேசு மக்களுக்கு எடுத்துரைத்த வேறு ஓர் உவமை: ‘‘ஒருவர் கடுகு விதையை எடுத்துத் தம் வயலில் விதைத்தார். அவ்விதை எல்லா விதைகளையும் விடச் சிறியது. ஆனாலும், அது வளரும்போது மற்றெல்லாச் செடிகளையும் விடப் பெரியதாகும். வானத்துப் பறவைகள் அதன் கிளைகளில் வந்து தங்கும் அளவுக்குப் பெரிய மரமாகும். விண்ணரசு இக்கடுகு விதைக்கு ஒப்பாகும்.’’

அவர் அவர்களுக்குக் கூறிய வேறு ஓர் உவமை: ‘‘பெண் ஒருவர் புளிப்பு மாவை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு முழுவதும் புளிப்பேறியது. விண்ணரசு இப்புளிப்பு மாவுக்கு ஒப்பாகும்.’’ இவற்றை எல்லாம் இயேசு மக்கள் கூட்டத்துக்கு உவமைகள் வாயிலாக உரைத்தார். உவமைகள் இன்றி அவர் அவர்களோடு எதையும் பேசவில்லை. ‘‘நான் உவமைகள் வாயிலாகப் பேசுவேன். உலகத்தோற்றமுதல் மறைந்திருப்பவற்றை விளக்குவேன்’’ என்று இறைவாக்கினர் உரைத்தது இவ்வாறு நிறைவேறியது.

**கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

**சிந்தனைக்கு:**

ஒரு பெரிய காட்டைச் சுத்தம் செய்ய வெண்டும். அதில் நிறைய முட்செடிகள், புதர்கள், குப்பைகள் இருந்தன. ‘‘வாங்க, இவை எல்லாவற்றையும் எரிக்க சிவகாசியில் போய் நான்கு லாரி தீக்குச்சி வாங்கி வருவோம். பெரிய காடு அல்லவா, நிறைய தீக்குச்சி வேண்டுமல்லவா!’’ என்றேன். எல்லோரும் சிரித்தார்கள். ஒரு அழிக்கும் சக்திக்கு அவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்றால் ஒரு நல்லவனுக்கு அதே ஆற்றல் இல்லையா? இருக்கிறது. அதை அடையாளம் காண வேண்டும். அவனுக்குள் இருக்கின்ற ஆன்மீக சக்தியே அந்த ஆற்றல். இயேசுவோடு உள்ள உறவே அந்த வலிமை. நற்செய்தி காட்டும் மதிப்பீட்டின்படி வாழ்வதே அந்த சக்தி. மனிதத்தையும் மனித நேயத்தையும் மதித்துப் போற்றி வாழ்வதே அந்த வல்லமை. உண்மைக்காக, நீதிக்காக போராடும் உணர்வே அந்த பலம். இது ஒரு கடுகளவு இருந்தால் போதும். அதன் தாக்கம் ஒரு

பெரிய ஆல மரத்தின் கிளைபோல பரந்து விரிந்து பல பறவைகள் தங்குவதற்கும் பல விலங்குகள் ஒதுங்குவதறகும் ஏற்ற இடமாகிறது.

நாம் பெற்றுள்ள ஆற்றல் அவ்வளவு வலிமை வாய்ததது என்பதால், அது அளவில் மிகச் சிறியதாயினும், எண்ணிக்கையில் மிகக் குறைந்ததாயினும், கொஞ்சம் புளிப்புமாவு, மாவு முழுவதும் புளிப்பேற்றுவது போல் உலகின் எல்லா இடங்களிலும் எல்லா சூழலிலும் அது வாழ்வுக்குச் சுவையூட்டக் கூடியது. எனவே, நாங்கள் கொஞ்சம் பேர், நான் ஏழை, நான் படிக்காதவன், நான் சிறியவன் என்றெல்லா காரணம் கூறுவது விசுவாச வாழ்வின் வல்லமையை உணராமை. கடுகு சிறிதாயினும் காரம் குறையாது. கடுகளவு விசுவாசம் இருந்தாலும் போதும் மலையையும் நகர்த்தலாம் என்றார் இயேசு. இந்த வல்லமை உன்னிடம் உள்ளது. புதிய உலகை உருவாக்க செபிப்போம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********